

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | செப்டம்பர் 27, 2018 | புரட்சி 17 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00

# ஆர்.எஸ்.எஸ். அணியும் புதிய ‘முகமூடி’

புதுடில்லியில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், சில அதிரடி அறிவிப்புகளை டெல்லி விஜயபவன் அரங்கில் வெளியிட்டிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். தனது ‘வேத நூலாக’ மதித்துப் பின்பற்றி வரும் குருகோல்வாக்கரின் பஞ்ச் ஆப் தாட்ஸ் (Bunch of Thoughts) கருத்துகளை இப்போது அப்படியே நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; அது ஒரு காலத்தில் கோல்வாக்கர் வெளியிட்ட கருத்து; அவரது உரைகளின் தொகுப்பே அந்த நூல் என்று கூறியிருக்கிறார்.

சட்டப்படி வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீடு உரிமைகளை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் பசுவைப் பாதுகாப்பது எங்கள் கொள்கை என்றாலும் அதற்காக நடத்தப்படும் தாக்குதல்களை தாங்கள் ஆதரிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார். ‘இராமர் கோயிலை’க் கட்ட விரும்புவதாகவும், அது சட்டத்தின் அனுமதியோடுதான் செய்ய வேண்டும் என்றும் இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கருதவில்லை என்றும் பேசியிருக்கிறார்.

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் பா.ஜ.க.வை அதிகாரத்தில் அமர்த்துவதற்காகவே இந்த ‘வேடங்களை’ ஆர்.எஸ்.எஸ். போடத் தொடங்கியிருக்கிறது.

மோகன் பகவத்தின் இந்த கருத்துகள் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு மட்டும் தானா அல்லது அதன் ‘கலவர’ அமைப்புகளாக வன்முறைகளைக் கையில் எடுத்து நிற்கும் ‘இராமசேனை’, ‘இந்து சேனை’, ‘இந்து சபா’ போன்ற அமைப்புகளுக்கும் பொருந்துமா என்பதை மோகன் பகவத் விளக்கவில்லை.

‘ஆர்.எஸ்.எஸ்.சின் முன்னோடி அமைப்பான ‘இந்து மகா சபா’ தலித் மக்களுக்கான இட ஒதுக்கீட்டையே தாங்கள் ஆதரிக்கவில்லை என்றும், வன்கொமை தடுப்புச் சட்டத்தில் உச்சநீதிமன்றம் செய்துள்ள திருத்தங்களை மாற்றக் கூடாது’ என்றும் கடந்த வாரம் வெளிப்படையாக அறிவித்திருக்கிறது.

‘இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்’ என்று ஓராண்டுக்கு முன் ‘திருவாய் மலர்ந்தது’ - இதே மோகன் பகவத் தான் என்பதையும் மறந்து விட முடியாது. ம.பி. மாநிலத்தில் பா.ஜ.க.வின் பார்ப்பன உயர்ஜாதியினர் இடஒதுக்கீட்டை எதிர்த்து வருகிறார்கள். ஒடுக்கப்பட்ட சமூக பா.ஜ.க.வினர் ஆதரிக்கிறார்கள். தேர்தலை சந்திக்கவிருக்கும் அம்மாநிலம் இப்போது இந்தப் பிரச்சினையில் மூச்சு திணறிக் கொண்டிருக்கிறது.

பகவத்தின் இந்த பேச்சுக் குறித்து, ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேட்டில் (23, செப்.2018) சகாரிக்கா கோஷ் என்ற பெண் பத்திரிகையாளர் எழுதியுள்ள கட்டுரையில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார். சோவியத் இரஷ்யாவில் ‘கோர்பச்சேவ்’ கொண்டு வந்த சீர்திருத்தத்தோடு பகவத் பேச்சை ஒப்பிட்டு, பகவத்தின் இந்த ‘கோர்பச்சேவ் பிரகடனம்’ நேர்மையாக இருக்குமா என்ற கேள்வியை எழுப்புகிறது அக்கட்டுரை.

“பகவத்தின் இந்த அறிவிப்புகள், தேர்தலில் ஓட்டுகளைப் பெறுவதற்காகவும் விளம்பரத்துக் காகவும் வடிவமைக்கப்பட்டவை. இதில் உண்மை இருக்கும் என்று நம்ப முடியாது” என்கிறார் அந்தக் கட்டுரையாளர். இந்து தீவிரவாதிகள், நாடு முழுதும் கட்டவிழ்த்துவிட்டு வரும் வன்முறைகளோடு தங்களுக்கு தொடர்பில்லை என்று காட்டுவதற்கான ஒரு நாடகம். உண்மையாக இந்துராஷ்டிரம் என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ். கை கழுவி, இந்திய அரசியல் சட்டத்தின் மதச்சார்பின்மை கொள்கையை ஏற்றுக் கொண்டுவிட்டது என்று நம்ப முடியாது என்றும் அக்கட்டுரை கூறுகிறது.

குஜராத், உ.பி. மாநில தேர்தல்களில் பா.ஜ.க., ஒரு முஸ்லிமைக்கூட வேட்பாளராக நிறுத்தவில்லை. இப்போது வரப்போகும் தேர்தல்களில் முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வை வலியுறுத்துமா?

ஆர்.எஸ்.எஸ். ‘ஞான குரு’ சவர்க்கார், இந்த நாடு ‘புண்ணிய பூமி’, ‘பித்ருபூமி’, இதில் இஸ்லாமியர்கள் இரண்டாம் தர குடிமக்கள் என்றார். அந்தக் கொள்கையை கை கழுவி விட்டோம் என்று ஆர்.எஸ்.எஸ். அறிவிக்குமா?

ஆர்.எஸ்.எஸ்.சின் துணைப் பிரிவுகள், ‘தாய் மதம்’ திரும்புதல் என்ற பெயரில் பிற மதத்தினரை இந்துவாக மாற்றுவதற்கு நடத்தும் இயக்கங்களையும் இந்துக்கள் பிற மதத்தினரை திருமணம் செய்வதை அனுமதிக்க மாட்டோம் என்ற ‘லவ்ஜிகாத்’ வெறுப்பு இயக்கத்தையும் கைவிடுவார்களா?

இராமன் கோயில் கட்டுவது நம்பிக்கை சார்ந்தது. இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது என்ற கருத்தை இப்போது மாற்றிக் கொண்டு விட்டார்களா?

கடந்த காலங்களில் இந்துத்துவ அமைப்புகள் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளை நியாயப்படுத்த முடியாத நெருக்கடியில் தவிக்கிறது பா.ஜ.க.

தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கவுரி லங்கேஷ் போன்ற பகுத்தறிவாளர்களை மதவெறி எதிர்ப்பு சிந்தனையாளர்களை இந்து பயங்கரவாத அமைப்பு துப்பாக்கியால் சுட்டுக் கொன்றபோது, ஒரு கண்டனம்கூட தெரிவிக்க முன் வராத அமைப்பு ஆர்.எஸ்.எஸ். இந்த பயங்கரவாதத்தையும் வன்முறையும் விரும்பாத இந்து உணர்வு கொண்ட மிதவாதிகளின் ஓட்டுக்களைக் குறி வைத்தே பகவத் இப்படி நாடகமாடுவதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வின் கட்டுரையாளர் கூறுகிறார்.

‘சாத்தான் வேதம் ஓதுகிறது’ என்று ஒரு பழமொழி உண்டு. சங்பரிவார் இப்போது புதிய முகமூடி தரித்துக் கொண்டு பேசக் கிளம்பி யிருக்கிறது. இந்த கபட வேடதாரிகளின் நாடகத்தில் மக்கள் ஒருபோதும் ஏமாற மாட்டார்கள்.

### பயணக் குழுவினர் ஆக்கபூர்வ யோசனைகளை முன்வைத்தனர்

## ஈரோட்டில் பரப்புரைப் பயண மீள் ஆய்வுக்குழு கூட்டம்



திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கல்வி உரிமை மீட்பு பரப்புரைக் குழுவில் பங்கேற்ற தோழர்கள், பயண ஒருங்கிணைப்பாளர்கள் செப்டம்பர் 15 அன்று கூடி, பயணத்தின் அனுபவங்கள், மேலும் பயணத்தை செழுமை யாக்குதல் குறித்து விரிவாக விவரித்தனர். ஈரோடு கே.எஸ்.கே. மகாலில், 11 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது. கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். கோவை நிர்மல் குமார், சூலூர் பன்னீர் செல்வம், மடத்துக்குளம் மோகன், விழுப்புரம் அய்யனார், சென்னை உமாபதி, மேட்டூர் அ. சக்திவேல், கொளத்தூர் பரத், காலாண்டியூர் ஈஸ்வரன், குருவை நாத்திகஜோதி, பவானி வேணுகோபால், திருப்பூர் முத்துலட்சுமி, காவை இளவரசன், சந்தோஷ் குமார், பெரம்பலூர் தாமோதரன் ஆகியோர் பயணத்தில் சந்தித்த ஆதரவையும், மேலும் பயணம் வெற்றி பெறுவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் முன் வைத்தனர்.

ஒவ்வொரு குழுவிலும் கலைக் குழுவினர் கட்டாயம் இடம் பெற வேண்டும்; பயணக் குழுவில் பேச்சாளர்களுக்கு பேசும் பொருள் குறித்து முன்கூட்டியே அழைத்து பயிற்சிதர வேண்டும்; ஒவ்வொரு நாளும் பயண அனுபவங்களை திறனாய்வு செய்து குறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்; தோழமை அமைப்புகளோடு தொடர்பு கொண்டு நிகழ்வில் பங்கேற்கச் செய்ய வேண்டும்; பயணக் குழு வருகை குறித்த விளம்பரங்களை உள்ளூர் தோழர்களே முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும்; பயணத்தில் பங்கேற்று உறுதியளித்தவர்கள், கடைசிநேரத்தில் வராமல் தவிர்ப்பதால் பயணக் குழுவின் பணிகள் தடைபடுகிறது. எனவே பயணத்தில் பங்கேற்க உறுதியளித்தவர்கள் பங்கேற்பை தவிர்க்கக் கூடாது. வாய்ப்பில்லாதவர்கள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். பயணக் குழுவில் பங்கேற்ற அனைவருமே தங்கள் கூச்சத்தைத் தவிர்த்து சுருக்கமாக உரையாற்றுவதற்கு தங்களைத் தயார்படுத்திக் கொண்டு பேச வேண்டும். பரப்புரையில் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய பிரச்சினைகளை தலைப்பு வாரியாகப் பிரித்துக் கொண்டு தனித் தனியாக தோழர்கள் அந்தத் தலைப்புக்குரிய செய்தி விளக்கங்களை மட்டுமே 5 அல்லது 10 நிமிடங்களில் பேசிட வேண்டும்.

பரப்புரைப் பகுதியில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தால் அல்லது பேருந்து நிலையப் பகுதிகளாக இருந்தால் பேருந்துகளில் பரப்புரையை நிகழ்த்த வேண்டும். காரணம், பேருந்துக்குள் பல்வேறு கிராமம், ஊர்களைச் சேர்ந்தவர்கள் பயணத்துக்காக அமர்ந்திருப்பார்கள். அவர்கள் பரப்புரைக் குறித்தும் அதில் பேசப்பட்ட கருத்துகள் குறித்தும் அவரவர் ஊர்களில் போய் பேசுவார்கள். சுருக்கமாக ‘நமது மக்களின் உரிமைகளுக்காகவே இதைப் பேசுகிறோம்; காது கொடுத்து கேளுங்கள்’ என்று கூறி, கருத்துகளைக் கூறும்போது மக்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது; அது நல்ல பயனைத் தருகிறது.

பயணக் குழுவினர் தங்கும் இடம், ஒரே இடமாக இருத்தல் வேண்டும். வெவ்வேறு இடங்களில் தங்க வைக்கப்படுவதால், இரவு பயணம் குறித்த விவாதங்கள் நடத்த முடியாமல் போகிறது. அடுத்த நாள் பயணத்தையும் குறித்த நேரத்தில் தொடங்க முடியாத சூழல் உருவாகி விடுகிறது. உள்ளூரில் தோழமை அமைப்புகளை பங்கேற்கச் செய்வது அவசியம். அவர்கள் அனைவரையும் பேச அனுமதிக்கும்போது சில நேரங்களில் பொதுக் கூட்டமாக மாறி விடுவதோடு, பயணத்தின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட அரசியலையும் அவர்கள் பேசுகிறார்கள். இதை கவனத்தில் கொண்டு, தவிர்க்க இயலாத சூழலில் சிலரைப் பேச அனுமதிக்கலாம். அப்போது, பயணத்தின் நோக்கங்களைப் பற்றியே பேசுமாறு கேட்டுக் கொள்ளலாம். சில பகுதிகளில் காவல்துறை கெடுபிடி, கொள்கை எதிரிகளின் திட்டமிட்ட எதிர்ப்புகள் வரும்போது, அதைக் கடந்து போய் பயணம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்ற இலக்கு நோக்கிய பார்வையோடு அணுகிட வேண்டும். சமூக வலைதளங்கள் வழியாக இந்த செய்திகளை பரப்பவும் கூடாது. அது பிற பகுதிகளுக்கும் பரவி ஆங்காங்கே எதிர்ப்பாளர்களைத் தூண்டி விடக் கூடும்.

பயணக் குழுவின் பரப்புரைக்கு காவல்துறை இயக்குநர் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் வழியாக உள்ளூர் காவல்துறைக்கு தகவல் அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு பயணத்துக்கும் உள்ளூர் தோழர்கள்தான் காவல்துறையில் தெரிவித்து அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். சில பகுதிகளில்

(4ஆம் பக்கம்)

# கழகம் எடுத்த பெரியார் பிறந்த நாள் விழாக்கள்

**தமிழகம் முழுதும் கழகத்தினர் எடுத்த பெரியார் விழாக்கள் பற்றிய தொகுப்பு:**

**குமரி மாவட்டம் :** திராவிடர் விடுதலைக் கழகம் குமரி மாவட்டம் நடத்திய பெரியார்140ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 16.09.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணிக்கு, விண்ணரசு வித்யா கேந்திரா, அழகிய மண்டபத்தில் தக்கலை எஸ்.கே.அகமது (பெரியாரியலாளர்) தலைமையில் கருத்தரங்கம் நடைப்பெற்றது.

அனீஸ் வரவேற்புரையாற்றினார். விஷ்ணு “பெரியார் பார்வையில் கடவுள் மறுப்பு” என்னும் தலைப்பிலும், நீதி அரசர் (பெரியார் தொழிலாளர் கழகம், மாவட்டத் தலைவர்) “பெரியார் பார்வையில் இடஒதுக்கீடு” என்னும் தலைப்பிலும், தமிழ் மதி (மாவட்டச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்) “பெரியார் பார்வையில் நீட்” என்னும் தலைப்பிலும், போஸ் (மார்க்சியலாளர்) “பெரியார் பார்வையில் பொதுவுடைமை” என்னும் தலைப்பிலும், மகிழ்ச்சி (ஒருங்கிணைப்பாளர், பொது வுடைமை தொழிலாளர் கட்சி) “இளைஞர்கள் எதை நோக்கி பயணிப்பது” என்னும் தலைப்பிலும் உரையாற்றினர். பின்பு கலந்துக்கொண்ட அனைவரும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர். சூசையப்பா (முன்னாள்மாவட்டத் தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்) நன்றி கூறமுடிவுற்றது.

கூட்டத்தில் மஞ்சு குமார் (மாவட்டப் பொருளாளர், திராவிடர் விடுதலைக் கழகம்) இரமேஸ்பாபு (இணைச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்), ஜாண்மதி (மாவட்டச் செய லாளர், பெரியார் தொழிலாளர் கழகம்), பளைக்கோடு செ.இரவி (பெரியாரியலாளர்), S.E.மேசியா (ப.நா.பு. ம.தொ.செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), சி.இராதாகிருஷ்ணன் (CPI(U) உறுப்பினர்) மரி.ஆர். கோபி (காமராஜர் பசுமை பாரதம், ஒருங்கிணைப் பாளர்), முனைவர் டி.மத்தியாஸ் (பணி நிறைவு பேராசிரியர்), செஜின் (ஸ்காட் கல்லூரி பேராசிரியர்), அன்வர் (பகுத்தறிவாளர்), ஆசிரியர் அருள்செல்வன் (சமூக ஆர்வலர்) செல்வி மேரி, இராஜன், சஜிகுமார், வைகுண்டராமன், சந்தோஸ், விஜயகுமார் ஆகியோர் கலந்துக்கொண்டுச் சிறப்பித்தனர்.

**விழுப்புரம் :** தமிழகத்தில் மதவெறி காலூன்ற முடியாத அளவிற்கு ஒவ்வொரு தமிழரின் உள்ளத்திலும் கொள்கையில் நிலைத்திருக்கின்ற தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா கடந்த காலங்களை விட இந்த ஆண்டு மிகச் சிறப்பாக தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டன.

அதனடிப்படையில் பெரியார் 140ஆவது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் வட்டம் நயனார்பாளையம் கிராமத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டன.

காலை 8.30 மணியளவில் வி.அலம்பளம் அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் அனைவருக்கும் பரிசுப் பொருள்கள் ( பேனா, நோட் ) மற்றும் இனிப்புகளை பாலன் பாலமந்திர் மெட்ரிக் பள்ளியில் பணிபுரிகின்ற கோமணிதனது செலவில் வழங்கினார். தலைமை ஆசிரியர் அ.சுசிலா வரவேற்புரையாற்றி னார். மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி அ.நாகராசன், க.அசன், பள்ளியின் ஆசிரியர் சரவணன் ஆகியோர் சிறப்பாக உரையாற்றினர். க.மதியழகன் வாழ்த்தி நன்றியுரையாற்றினார்.

காலை 10 மணியளவில் தந்தை பெரியார் பள்ளியில் பெரியாரின் முழு உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பள்ளி மாணவ மாணவிகள் தந்தை பெரியாரின் போராட்டங்கள் மற்றும் அவரின் புகழ்குறித்து சிறப்பாக பேசினார்கள். அனைவருக்கும் பரிசு பொருள்களை பள்ளியின் தலைமை ஆசிரியர் தமிழ்இராவணன் சார்பில் வழங்கப்பட்டது.முருகன் மளிகை இரமேசு சார்பில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக புலவர் கு.அண்டிரன் கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

மாலை 6 மணிக்கு மேல் தாரை தப்பாட்டத்தோடு பலர் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையத்தில் பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பெரியாரின் பொது வாழ்வு குறித்து க.மதியழகன், ந.வெற்றிவேல், புலவர் கு.அண்டிரன் ஆகியோர் சுருக்கமாக சிறப்புரையாற்றினர். விடுதலை சிறுத்தைகள் கட்சி வேலு நன்றியுரையாற்றினார்.

விழாவில் காலை முதல் மாலைவரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மணி, சக்திவேல், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக இராமசாமி, இராமதாசு, இராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக மைக்கேல், ஆறுமுகம் மற்றும் பல நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மகேந்திரன் ( ஆத்தூர்), சகாதேவன், ஐயம்பெருமாள், திருமால், சரவணன், அரவிந்தன், சையது முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்தனர். பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஒலிபெருக்கியை இயக்குவதற்கு



முருகன் மளிகை இரமேசு வழங்கினார். பங்களிப்பு மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் இயக்கம் சார்பாக நன்றிகலந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஈரோடு வடக்கு கோபி ஒன்றியம்:** அறிவுலக ஆசான் தந்தை பெரியார் 140 ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கோபி ஒன்றியத்தின் சார்பில் அனைத்தும் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் ஒருங்கிணைந்த ஊர்வலம் நடைபெற்றது. கோபி சீதா கல்யாணம் மண்டபத்தில் துவங்கி பேருந்து நிலையம் வழியாக பெரியார் சிலையை அடைந்தது. அங்கு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பின் அனைத்து அமைப்புகளின் பொறுப்பாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்வில் திவிக, திக, தபெதிக, திமுக, மதிமுக, புஇமு உள்ளிட்ட அமைப்புகள் கலந்து கொண்டனர்.

அளுக்குளி பகுதி கழகத் தோழர்களின் சார்பில் அய்யா பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அளுக்குளி பேருந்து நிறுத்தம் பகுதியில் அலங்கரிக்கப்பட்ட அய்யா படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கழக கொடிக்கம்பத்தில் தங்கம் கழகக் கொடியை ஏற்றினார். நிகழ்வில் விசயசங்கர், விசய பிரகாசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**டிஎன்.பாளையம் ஒன்றியம் :** பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு டிஎன் பாளையம் ஒன்றியம் சார்பில் கொடியேற்றம் மற்றும் கல்வி உரிமை மீட்பு பரப்புரை பயணம் நடைபெற்றது. காந்திநகர் பகுதியில் அமைக்கப்பட்ட அய்யா படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் அங்கு நடைபெற்ற பரப்புரை பயணத்தில் தோழர்கள் இரமேசு, வேலுச்சாமி உரை நிகழ்த்தினர்.தொடர்ந்து தோழர்கள் ஊர்வலமாக காசிப்பாளையம் பகுதிக்கு சென்றனர். அங்கு கழகக் கொடி கம்பத்தில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் காளியண்ணன் கழகக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து ஊர்வலம் அக்கரை கொடிவேரி பிரிவை அடைந்தது. அங்கு கழகக் கொடியை திமுக ஒன்றிய செயலாளர் சிவபாலன் ஏற்றினார். தொடர்ந்து செயக்குமார் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளி ஜெயஸ்ரீக்கு ரூபாய் பத்தாயிரம் உதவித் தொகையை திவிக மாநில வெளியீட்டு செயலாளர் இராம.இளங்கோவன்மற்றும் திமுக ஒன்றிய செயலாளர் சிவபாலன் வழங்கினர். அங்கு நடந்த பரப்புரைப் பயணத்தில் இரமேசு, இளங் கோவன் ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் அனைவருக்கும் கொடிவேரி அணை பகுதியில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நிகழ்வுக் கான ஏற்பாடுகளை செயக்குமார் ஒருங்கிணைப்பில் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

**சத்தி ஒன்றியம்:** அய்யா அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு சத்தி ஒன்றிய கழகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்து முற்போக்கு இயக்கங்கள் ஒருங்கிணைந்த ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தை தலித் விடுதலை கட்சி நிறுவனர் டாக்டர் செங் கோட்டையன் துவங்க வைத்து சிறப்புரை ஆற்றினார். SRT கார்னரில் துவங்கிய ஊர்வலம் பேருந்து நிலையம் வந்து பின் புதுவடவள்ளி சமத்துவபுரத்தில் நிறைவுபெற்றது. சமத்துவபுரத்தில் அமைந்த உள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்து பின் அனைத்து அமைப்பின் பொறுப்பாளர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். நிகழ்விற்கான ஏற்பாடுகளை திவிக பழனிச்சாமி, மூர்த்தி மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றம் முத்து, கிருட்டிணசாமி ஆகியோர் ஏற்பாடு செய்து இருந்தனர்.

**நம்பியூர் ஒன்றியம் :** பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு நம்பியூர் ஒன்றியம் கூடக்கரையில் அலங்கரிக்கப்பட்ட அய்யா அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் ஊர்வலமாக தோழர்கள் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள அய்யா சிலைக்கு வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வை தோழர்கள் கலைச்செல்வன், சிவராஜ், முருகேசன் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்து இருந்தனர்.

**அந்தியூர் ஒன்றியம் :** பெரியார் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அந்தியூர் ஒன்றியம் சார்பில் கீழ்வானி இந்திரா நகரில் அமைக்கப்பட்டிருந்த அய்யா படத்திற்கு தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர் சுந்தரம் தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**அம்மாபேட்டைஒன்றியம் :** அம்மாபேட்டை ஒன்றிய கழகத்தின் சார்பில் குருவரெட்டியூரில் அமைந்துள்ள அய்யா சிலைக்கு நாத்திகசோதி தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் தோழர்கள் வேல்முருகன், இராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்ட அமைப் பாளர் சாமிதுரை தலைமையில் சங்கராபுரம் பகுதியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. அரசம்பட்டு பெரியார் சிலையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட்டது. செம்பராம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியில் 200 மாணவர்களுக்கு லட்டு கொடுத்து ஆசிரியர்களுக்கு கழக துண்டறிக்கைகள் கொடுக்கப் பட்டது அந்த பள்ளிக்கு கழகத்தின் சார்பில் பெரியார் படம் வழங்கப்பட்டது. துளசிராஜா, ராஜேஷ் குமார், முருகன், கார்மேகம், ராஜீவ்காந்தி மற்றும் 20 க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

**செஞ்சி :** 140 ஆவதுபெரியார் பிறந்தநாள் விழா செஞ்சி கூட்டு சாலையில் திராவிடர் விடுதலை கழகம் சார்பில் சிறப்பாக கொண்டாடப் பட்டது. நிகழ்ச்சியில் பெரியார் சாக்ரடீஸ் அனைவரையும் வரவேற்க பெரியார் படத்திற்கு ம.தி.மு.க.துனை பொது செயலாளர் ஏ.கே.மணி, வி.சி.க. வெற்றிச் செல்வன், தி.க. அர்ச்சுணன், பழங்குடி. ம.மு. சுட ரொளி சுந்தரம், தி.மு.க. கர்ணன், அ.ம.க.சேகர், சி.பி.ஐ. செல்வராஜ், பெரியார் சிந்தனையாளர் பேரவை துரை திருநாவுக்கரசு. அரிமா சங்கம் அசோக், கவிஞர் செஞ்சி தமிழினியன், தர்மசிங், ஞானமணி மற்றும் பலர் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். அரசு நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

**அனந்தபுரம் :** சூர்யா தலைமையில் மார்கெட் வீதியில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு சென்னையில் பெரியார் சிலையை அவமதித்ததை கண்டித்து சாலைமறியல் செய்தனர். தோழர்களை கைதுசெய்து மாலை விடுவித்தனர்.

**பெரம்பலூர் :** பெரம்பலூர் திராவிடர் விடுதலைக் கழம் சார்பாக பெரியார் 140வது பிறந்த நாள் விழாவிற்காக நகர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. காலை 9 மணி அளவில் மாவட்டத் தலைவர் தாமோதரன் தலைமையில் சுதாகர், ராஜேஷ்குமார், எல்அச்சி கார்த்திகேயன், சிந்தனையாளர் வட்ட பொருப்பாளர் துரைசாமி, ஜெயராமன், தமிழோசை, பாளை செல்வம், புலவர் வரதராசன் ஆகியோர் அய்யா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**விருதுநகர் :** செப் -17 தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு விருதுநகர் பழைய பேருந்து நிலையம் - சமத்துவபுரம் எரிச்சந்தம் பகுதியில் அமைந்துள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்து கழகத் தோழர்கள் மரியாதை செலுத்தினர்.

**மேட்டூர் ஆர்.எஸ்.:** தந்தை பெரியார் -140ஆவது பிறந்தநாள் விழா; இருசக்கர வாகன பேரணி; கொடியேற்று விழா; பறை முழக்கம் - சமத்துவபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து அனைத்து இடங்களிலும் கொடியேற்றப்பட்டது.

சமத்துவபுரம் பெரியார் சிலைக்கு கோவிந்தராசு (மேற்கு மாவட்ட செயலாளர்), ஆர்.சி.பிலாண்ட்டில் சு.இராமச்சந்திரன், இராமன் நகரில் சந்திரமூர்த்தி, புதுச்சாம்பள்ளியில் நாகராசு (தமிழ்நாடு மாணவர் கழகம்). ஆர்.எஸ் பேருந்து நிலையத்தில் சு.விவேக் (ஆர்.எஸ் பகுதி செயலாளர்), ஆர்.எஸ் டி.கே.ஆர் நினைவு படிப்பகத்தில் பொ.முரளி (ஆர்.எஸ் பகுதி தலைவர்), (ஆர்.எஸ்) என்.எஸ்.கே நகரில் பழ.சுசிந்தர் (ஆர்.எஸ் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்), சேலம் கேம்ப் பேருந்து நிலையத்தில்சந்தோஷ் (சேலம் கேம்ப்), காந்தி நகர் படிப்பகத்தில் கோவிந்தராசு (மேற்கு மாவட்ட செயலாளர்) ஆகியோர் கொடியேற்றினர்.

**திருப்பூர் :** பெரியார் 140ஆவது பிறந்த நாளையொட்டி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இரு சக்கர வாகன ஊர்வலம் மற்றும் கொடியேற்று விழா திருப்பூர் இரயில் நிலையம் அருகே நடைபெற்றது. அப்போது அந்த பகுதியில் உள்ள பெரியார் சிலைக்கு கழகத்தினர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து பெரியார் சிலை அவமதிக்கப்பட்டதைக் கண்டித்து முழக்கமிட்டனர். இதன் பின்னர் பெரியார் கொள்கைகளை உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

பேரணிக்கு மாவட்டத் தலைவர் முகில்ராசு தலைமை தாங்கினார். பொருளாளர் சு. துரைசாமி தொடங்கி வைத்தார். பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் கொடியேற்றி பேசினார். மாவட்ட செயலாளர் நீதியரசன் உள்படட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, அங்கிருந்து இரு சக்கர வாகனப் பேரணி தொடங்கப்பட்டது. இராயபுரம், கல்லம்பாளையம், வள்ளுவர் தெரு, ரங்கநாதபுரம், பெரியார் நகர், அனுப்பர்பாளையம், புதூர், ஆத்துப் பாளையம், பெருமாநல்லூர், முருகம்பாளையம், இடுவம்பாளையம் உள்பட 25 இடங்களில் கழகக் கொடியேற்றப்பட்டது. ஆங்காங்கே இனிப்புகளும் வழங்கப்பட்டன. வீரபாண்டியில் பேரணி நிறைவடைந்தது. குழந்தைகள், பெண்கள் உள்பட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை (3)

# இந்தியாவிலேயே பெண்களுக்கு சொத்துரிமை வழங்கிய முதல் மாநில முதல்வர் கலைஞர்

*தம்மம் சிந்தனையாளர் பேரவை சார்பில் 'கலைஞரின் பன்முக ஆளுமை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் செப்.8, 2018 மாலை 5 மணியளவில் பெரியார் திடலில் உள்ள மணியம்மையார் அரங்கில் நடைபெற்றது.*

*குடும்ப வாரிசுரிமை சட்டத்தில் பெண்களுக்கு பங்கு உண்டு என்ற சட்டத்தை இந்தியாவிலேயே முதல்முறையாகக் கொண்டு வந்தது கலைஞர் ஆட்சி தான் என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

கலைஞரின் சிந்தனையில் இந்த சட்டத்தைக் கொண்டு வரத் தூண்டுதலைத் தந்தது. 1929இல் செங்கல்பட்டில் பெரியார் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானம் சட்டத்தை நிறைவேற்றி விட்டு கலைஞர் சொன்னார், செங்கல்பட்டு மாநாடு முடிந்து 60 ஆண்டு கழித்தல்லவா, இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்ற முடிந்திருக்கிறது!" என்றார். பின்னர் நாடு முழுதும் இந்த சட்டம் விரிவுபடுத்தப்பட்டதற்குக்கூட தூண்டுகோலாக இருந்தது, அன்றைய நடுவண் ஆட்சியில் தி.மு.க.வின் பங்கேற்பு தான். அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு; பெண்களை முதன் முதலாக காவலர் பணிக்குத் தேர்வு செய்தது என்பதில் இந்தியாவுக்கே வழிகாட்டிய பெருமை கலைஞரின் நிர்வாகத் திறனுக்கு சான்றாகும். நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு நீண்டகாலப் போராட்டத்துக்குப் பிறகும் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ் நாட்டில் உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார் கலைஞர்.

ஏழைப் பெண்கள் திருமணத்துக்கு நிதி உதவி, தாலி வழங்கும் திட்டத்தைக் கலைஞர் கொண்டு வந்தபோது இந்த உதவியைப் பெற பெண்கள் எட்டாவது வரை படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அதில் இணைத்துக் கொண்டார். இத்திருமண உதவிகளைப் பெறுவதற்காவது பெண்களை எட்டாம் வகுப்பு வரை படிக்க வைக்க வேண்டும் என்ற கட்டாயத்துக்குத் தள்ளப்படுவார்களே என்ற சிந்தனையில்தான், இப்படி ஒரு முடிவை எடுத்ததாகக் கூறினார். அரசின் திருமண உதவித் திட்டத்தை பெண் கல்வியோடு இணைத்தது, கலைஞரின் நிர்வாகத் திறன்.

சத்துணவுத் திட்டம் குறைந்த விலையில் அரிசி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களை மக்களைக் கவர்வதற்கான திட்டங்கள், வளர்ச்சியை நோக்கிய திட்டங்கள் அல்ல என்ற விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இதை அழுத்தமாக மறுக்கிறார் பொருளாதார ஆய்வாளர் ஜெயரஞ்சன். 1996இல் ஆட்சிக்கு வந்த கலைஞர், ஒரு கிலோ அரிசி ரூ.2 என்ற திட்டத்தை பதவி ஏற்ற நாளிலேயே அறிவித்தார். இதன் சமூகத் தாக்கத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்று கூறும் பேராசிரியர் ஜெயரஞ்சன், பசியிலிருந்து மக்களை விடுவிப்பது சமூக விடுதலையின் ஒரு பகுதி என்பது மட்டுமல்ல. "ஆண்டைகளை நம்பி தொழிலாளர்கள் வயிறு வளர்க்கும் காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்த திட்டம்" என்று சுட்டிக் காட்டுகிறார். உணவுக்காகவே உழைக்க வேண்டியிருந்த ஏழை மக்களை அதிலிருந்து விடுவித்து அவர்களை வேறு புதிய பணிகளில் திரும்ப வைத்தது இத்திட்டம்.

இந்திய உணவுக் கழகத்துக்கு இணையாக தமிழக நுகர் பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கியவர் கலைஞர். இந்திய உணவுக் கழகம், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்து இருப்பு வைத்து மாநிலங்களுக்கு பங்கீடு செய்யும் அதிகாரத்தை வைத்திருந்தது. அந்தப் பங்கீட்டில் அரசியல் தலை தூக்கியது. தமிழகத்தில் வறட்சிக் காலத்தில் கூடுதல் நெல் கேட்டபோது நடுவண் ஆட்சி தர மறுத்த நிலையில் மாநிலமே ஏன் நேரடி கொள்முதல் செய்து கிடங்குகளை உருவாக்கி சேமிக்கக் கூடாது என்று கலைஞர் சிந்தனையில் உதித்த திட்டம் தான் தமிழக நுகர் பொருள் வாணிபக் கழகம். உணவு வழங்கலில் டெல்லியின் அதிகாரத்தைத் தகர்த்த மிகச் சிறந்த திட்டம் என்கிறார், பேராசிரியா ஜெயரஞ்சன்.

நிர்வாகத்தில் கோப்புகள் பல்வேறு நிலைகளைக் கடந்து துறை செயலாளர் பார்வைக்கு வந்து இறுதியில் துறை அமைச்சருக்கு வந்து சேர்வதற்குள் எடுத்துக் கொள்ளும் காலம் நீண்டது. இந்தக் கோப்பு தாமதங்களை நீக்கி நிர்வாகத்தை முடுக்கிவிட கலைஞர் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் தலைமைச் செயலகத்துக்கு வரும் நடைமுறையை மேற்கொண்டார். இதனால் துறை சார்ந்த அதிகாரிகளும் தலைமைச் செயலகம் வரும் கட்டாயம் உருவானது; நிர்வாகம் முடுக்கி விடப்பட்டது.

வார இறுதி நாட்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது அந்தந்த மாவட்டங்களிலும் ஆய்வுக் கூட்டங்களை ஏற்பாடு செய்து அதிகாரிகளுடன் பேசுவதை வழக்கமாக்கினார். அந்த செயல்பாடுகளின் விளைவுகளை - அதிகார மட்டத்தையும் கடந்து தனக்குள்ள தனிப்பட்ட உறவுகளிடம் விசாரித்து அறிவார். 1996ஆம் ஆண்டு அவர் முதலமைச்சராக வந்தபோது நிர்வாகத்தில் ஒரு புதிய நடைமுறையை பின்பற்றத் தொடங்கினார். அரசின் திட்டங்கள் செயலாக்கத்தைக் கண்காணிக்க முதல்வர் அலுவலகத்திலிருந்தே அய்.ஏ.எஸ். அதிகாரிகளைத் தேர்வு செய்து அவர்கள் பொறுப்பில் ஒப்படைத்தார். கலைஞரால் நியமிக்கப்படும் அதிகாரிகள் குழு அதைக் கண்காணிக்கும் அதிகாரிகள் டி.ஆர். ராமசாமி, அசோக் வர்த்தன் ஷெட்டி, இறை அன்பு ஆகியோரைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை 2016இல் உருவாக்கினார். பல்வேறு துறைகளைப் பகுத்து, துறைசார் செயல்பாடுகளின் திட்டங்களை தொடக்க நிலை பரிசீலனைக்கு உட்படுத்தி, அதன் தொடர் நிக்ழவுகளைக் கண்காணிப்பது குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. திட்டங்களை உருவாக்கி ஆணைகள் பிறப்பித்து இறுதிக் கட்டத்தில் முதலமைச்சரின் பார்வைக்குக் கொண்டு வரப்படும். ஒவ்வொரு முறை அதிகாரத்துக்கு வரும்போதும் இத்தகைய நிர்வாகத் திறன் கொண்ட குழுவை உருவாக்கி செயல்பட்டார் கலைஞர். குறிப்பாக 1996-2001 காலகட்டத்தில் கலைஞரின் ஆட்சித் திறன் மிகச் சிறப்பான ஒன்றாக பாராட்டப்படுகிறது. மிகச் சிறந்த விளைவுகளை இந்த நிர்வாகத் திறன் உருவாக்கியது மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே. இராதாகிருட்டிணன், 'பிரண்ட் லைன்' ஆங்கில ஏட்டில் (ஆக.31, 2016) இத்தகவல்களை பதிவு செய்திருக்கிறார்.

கலைஞரோடு ஏதேனும் ஒரு வகையில் தங்களுக்குள்ள தொடர்பை அவரது மரணத்துக்குப் பிறகு ஏராளமானோர் குறிப்பிடுகிறார்கள். இப்படி அவரது தொடர்பு - உறவுகளின் எல்லைப் பரந்து விரிந்து கிடப்பதற்கான காரணத்தை அவரே கூறியிருக்கிறார். பெரும்பாலான நாட்களில் விடியற்காலை 4 மணிக்கே விழிக்கும் பழக்கம் கொண்ட அவர், முதலில் எழுத்துப் பணிகளை முடித்து விடுவார்; பிறகு செய்தி ஏடுகள் அனைத்தையும் படிப்பார். அன்றைய ஏடுகளில் வந்த செய்திகள் தொடர்பாக தொடர்புடையவர்களிடம் உடனே நேரடியாக தொடர்புக் கொண்டு பேசி விடுவார். அன்றே முடிக்கப்பட வேண்டிய பணிகளை பலரிடம் பேசிய பிறகு முடித்து விடுவார். மக்கள் வழக்கமாக உறக்கத்திலிருந்து விழிக்கும் நேரத்துக்கு முன்பே கலைஞரின் இந்தப் பணிகள் முடிந்து விடும்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்கள் பிரச்சினைகளை கலைஞர் எப்படி அணுகினார் என்ற தகவலை மூத்த செய்தியாளர் இராதாகிருஷ்ணன் அதே கட்டுரையில் குறிப்பிடுகிறார். 2006ஆம் ஆண்டு முதல்வராக வந்தவுடன் தொழில் துறை செயலாளராக இருந்த எம்.எச். ஃபரூக்கியை அழைத்து முதலீட்டாளர்கள் பிரச்சினையை அவர் மட்டுமே கையாள வேண்டும் என்று அறிவுறுத்தினார். துறை செயலாளர் பரிந்துரையை மேல் மட்டக் குழுவில் விவாதித்து தொடங்கப்படவிருக்கும் தொழிலுக்கு ஒப்புதல் பெற்றுவிட்டால், காலதாமதமின்றி அதற்கான அனுமதியை வழங்கிட வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். முதலீட்டாளர்கள் துறைச் செயலாளரைத் தவிர வேறு அதிகாரிகளையோ அமைச்சர்களையோ சந்திப்பதற்கு முழுமையாக கலைஞர் தடை விதித்தார். இத்தகைய சந்திப்புகள் இலஞ்ச ஊழலுக்கு வழி வகுத்து விடும் என்ற நோக்கத்தோடு கலைஞர் எடுத்த முடிவு இது.

2006ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் நிர்வாகம் ஆலையை மேலும் விரிவாக்கவும் தொடர்புடைய பல துணைத் தொழில்களை உருவாக்கவும் தூத்துக்குடியை பெரும் தொழில் நகரமாகவும் மாற்றும் திட்டங்களோடு தொழில்துறை செயலாளர் ஃபரூக்கியை சந்தித்துப் பேசியது. உற்சாகமடைந்த தொழில்துறை செயலாளர் மிகவும் ஆர்வத்தோடு முதல்வர் கலைஞரை சந்தித்து எடுத்துக் கூறினார். சுமார் ஒரு மணி நேரம் அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட கலைஞர், 'பார்க்கலாம்' என்ற ஒரே வரியில் முடித்துக் கொண்டார். அவ்வளவு தான். 'ஸ்டெர்லைட்' விரிவாக்கத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இது வரலாறு.

1900இல் உலகமயமாக்கல் கொள்கை இந்தியாவில் நுழைந்தவுடன் தனியார் பன்னாட்டு நிறுவன முதலீடுகள் வரத் தொடங்கியதோடு, உயர் கல்வியும் தனியார் மயமானது. சூழ்நிலையைப் புரிந்து கொண்டார் கலைஞர். தகவல் தொழில் நுட்பத் துறையில் ஒரு புரட்சி நடக்கப் போகிறது. அதற்கேற்ப தமிழ்நாட்டை தயார்படுத்தத் திட்டமிட்டார். 1997இல் தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கைகளை உருவாக்கி அறிவித்தார். இந்தியாவிலேயே இத்துறைக்கான கொள்கைகைய உருவாக்கி அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடு. அதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் வாஜ்பாய் ஆட்சி காலத்தில் தேசிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையே வெளியிடப்பட்டது. கலைஞர் உருவாக்கிய கொள்கையினால்தான் 'டைடல் பார்க்' சென்னைக்கு வந்தது. அந்த பூங்காவில் இருந்த தொழில்நுட்ப நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான உயர்கல்வித் துறையும் முடுக்கி விட்டார் கலைஞர். 1999இல் அவர் நடத்திய உலகத் தமிழ் இணைய மாநாடு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இணைய உலகில் தமிழ் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது இந்த மாநாடு.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இந்து மதமும் திராவிடர் இயக்கமும்

தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். காவி ஆட்சியை வீழ்த்துவோம் என்று தி.மு.க. தலைவர் ஸ்டாலின் இப்போது அறிவிக்கிறார். இவரே எங்களது கட்சியில் 90 சதவீதம் பேர் இந்துக்கள் என்று ஏற்கனவே கூறியவர் தானே ? இது முரண்பாடு அல்லவா ? என்று கேட்டார்கள்.

முரண்பாடு அல்ல என்று நான் பதில் கூறினேன். பார்ப்பனரல்லாத தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் அனைவருமே விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ‘இந்து’க்கள் என்ற பட்டியலில் தான் அடைத்து வைக்கப்பட் டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியலை உருவாக்கி அவர்களுக்கு சமூகநீதி உரிமைகள் வழங்கப்பட்டாக வேண்டும் என்ற நிலையை உருவானதற்கே அடிப்படை என்ன ? இந்த மக்களை இந்துக்களாகி, பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிமையாக்கி, அவர்கள் மீது சுமத்திய இழிவை நீக்கவும் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டுத் தரவும் இந்த இடஒதுக்கீடு பட்டியல்களே வந்தன ! ‘இந்துக்கள்’ என்றாக்கப்பட்டதால் உழைக்கும் மக்கள் கொடுத்த கடும் விலை இது.

திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் - சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி, சமத்துவம் என்று இப்போது தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பேசி வருகிறார். இந்த சுயமரியாதையும், பகுத்தறிவும், சமூகநீதியும், சமத்துவமும், எந்த மக்களுக்காக பேசப்படுகிறது ? இவைகளை பறிகொடுத்து நிற்கும் ‘இந்து’ மக்களுக்குத் தானே !

அனைத்து ஜாதியினரும் கோயில் கர்ப்பகிரகத்தில் நுழைந்து வழிபாடு செய்யும் உரிமையை பெரியாரும் தி.மு.க.வும் யாருக்காகக் கேட்டார்கள் ? பார்ப்பனியத்தால் சூத்திர இழிவுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் இந்துக்களுக்குத் தானே ?

ஆக, உரிமை பறிக்கப்பட்ட பார்ப்பனியத்தால் ‘இந்து’க்கள் என்ற அடை யாளப்படுத்த மக்களின் உரிமைக்காகவே திராவிட இயக்கம் போராடுகிறது. அதே நேரத்தில் இந்த உரிமைகளை மறுக்கும் இந்து மதத்தை எதிர்க்கிறது.

ஆனால், இந்து மதத்தைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் பார்ப்பனியம் இந்த வெகுமக்களான ‘இந்த’க்கள் உரிமைகளை மறுக்கிறது.

அதே நேரத்தில் இந்து மதத்தை எதிர்க்கும் நாங்கள், அந்த மதத்தால் பாதிக்கப்பட்ட இந்து மக்களுக்காகக் களத்தில் நிற்கிறோம்.

அதனால்தான் ஸ்டாலின் கூறினார். எங்கள் கட்சியில் உள்ள 90 சதவீதம் பேர் ‘இந்துக்கள்’ என்றார். சுயமரியாதையும் சமூகநீதியும் மறுக்கப்பட்ட ‘இந்துக்கள்’ இவர்களோடு சேர்த்து உரிமைகள் மறுக்கப்பட்ட முன்னாள் ‘இந்துக்களான’ அதாவது இஸ்லாமியர்கள், கிறித்துவர்களின் உரிமை களுக்காகவும் நாங்கள் குரல் கொடுக்கிறோம். இந்த முன்னாள் இந்துக்களை பகைவர்களாக சித்தரிக்கிறார்கள், ‘இந்து’ மதக் காப்பாளர்கள்.

சுருக்கமாகச் சொன்னால், நாங்கள் பார்ப்பன இந்து மத எதிர்ப்பாளர்கள். ஆனால் இந்து மதத்தால் பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட ‘இந்து’க்களுக்கு ஆதரவாளர்கள்.

‘நான் இந்துவாகத்தான் பிறந்தேன்’ என்றுதான் அம்பேத்கரும் கூறினார். ஆனால் ‘இந்துவாக சாக மாட்டேன்’ என்று சூளுரைத்தார்.

இந்து மத எதிர்ப்பாளர்கள் என்ற வாதத்துக்குள் பதுங்கிக் கொண்டு திராவிட இயக்கத்தை வீழ்த்தி விடலாம் என்று கனவு காணாதீர்கள் !

**கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து**

*முதல் பக்கத் தொடர்ச்சி*

உள்ளூர் தோழர்கள் இந்தப் பணியை செய்யாத நிலையில் பயணக் குழுவினரே காவல்துறையிடம் போய் பயணத்தை எடுத்துக் கூறி அனுமதி பெறும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இது பயணக் குழுவினருக்கு பெரும் சுமையாகிவிடுகிறது.

பரப்புரைப் பயணங்களில் பேசும்போது, கழக வெளியீடுகளை கட்டாயம் அறிமுகப்படுத்திப் பேச வேண்டும். துண்டறிக்கைகளின் எழுத்து வடிவம் இன்னும் சற்று பெரிதாக இருந்திருக்கலாம். பரப்புரைப் பயணத்துக்கு முன்பு மாவட்டக் கழகக் கூட்டத்தைக் கூட்டி, பயணத்துக்கான ஏற்பாடுளைப் பற்றி திட்டமிட வேண்டும். பயணக் குழு வருகையை சுவரொட்டி அல்லது துணிப் பதாகை வழியாக விளம்பரப்படுத்த வேண்டும். பயணத் திட்டத்தில் மாறுதல்களை செய்து வேறு பகுதிகளுக்கு குழுவினரை அழைத்துச் செல்வதை முழுமையாக தவிர்க்க வேண்டும். காலை முதல் இரவு 7 மணி வரை தொடர்ந்து பயணக் குழுவில் பணியாற்றும் தோழர்கள் இரவில் சோர்வடைந்துள்ள நிலையில் அவர்களுக்கான தங்குமிடம், உணவு ஏற்பாடுகளை ஓரளவு நன்றாகவே செய்து தர வேண்டும். பயணக் குழுவினருக்கு அந்தப் பகுதிக் கழக அமைப்புகள் செலவுத் தொகை வழங்க வேண்டும். தங்கள் பகுதியில் ஒரு கூட்டம் நடத்தினால் ஆகும் செலவை கருத்தில் கொண்டு இப்படி ஒரு பரப்புரை வந்திருப்பதை மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வரவேற்று தோழர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற கருத்துகள் தோழர்களால் முன் வைக்கப்பட்டன. நிறைவு விழா மாநாட்டை தோழர்கள் ஆதரவுடன் வெற்றிகரமாக நடத்தி முடித்த பெரம்பலூர் துரை. தாமோதரன், அண்மைக்கால பெரம்பலூர் வரலாற்றில் இவ்வளவு பெரிய மாநாடு நடந்தது இல்லை என்று பலரும் தன்னிடம் தெரிவித்ததாகவும், தோழமை அமைப்புகள் மாநாட்டுக்கு மகிழ்வோடு நன்கொடை அளித்து உதவியதையும் கழகத்தின் மீது பொதுவான நிலையில் உள்ளவர்களுக்கு நல்ல மதிப்பு இருப்பதை நேரில் அறியும் வாய்ப்பு கிட்டியதையும் சுட்டிக் காட்டினார்.

பரப்புரைப் பயணத்தை ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தலாம். நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்றும் பல தோழர்கள் உற்சாகத்துடன் கூறினர்.

மக்களை சந்தித்து கொள்கைகளைப் பரப்புகிறோம் என்ற மனநிறைவோடு கழகத் தோழர்களிடையே நெருக்கமான உறவு - புரிதலை உருவாக்கி, கழகத்தை இத்தகைய பயணங்கள் மேலும் வலிமையாக்குகிறது என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்கள் முன் வைத்த யோசனைகளை பரிசீலித்து அடுத்த பயணத் திட்டங் களை மேலும் செழுமையாக்குவோம் என்று கூறி தோழர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

**– நமது செய்தியாளர்**

# திராவிட இயக்கத்தில் கலைஞர் பங்களிப்பு

திராவிடர் இயக்க பணிகளும் கலைஞர் பங்களிப்பும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் 17.09.18 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. எழுத்தாளர் வி.எம்.எஸ் சுபகுணர ராஜன், பேராசிரியர் கல்யாணி, ஆசிரியர் இராமமூர்த்தி ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியை மருதம் இரவி கார்த்திகேயன் ஒருங்கிணைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, கழகத் தலைவரை சால்வை அணிவித்து வரவேற்று நிகழ்ச்சி முடியும் வரை அமர்ந்து கேட்டுகொண்டிருந்தார். தி.மு.க. கட்சித் தோழர்கள், அய்.ஏ.எஸ் பயிற்சி மாணவர்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழக செயற்குழு உறுப்பினர் அய்யனார், விழுப்புரம் கிழக்கு மாவட்டத் தலைவர் பூஆ.இளையரசன், செஞ்சி பெரியார் சாக்ரட்டீஸ், சென்னை தம்பி மண்டேலா, நடராசன், தமிழக வாழ்வுரிமை கட்சி புதுச்சேரி பரப்புரை செயலாளர் விஜி, இளங்கோவன், பெரியார் கணேசன், அழகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வடசென்னை கழகம் நடத்திய கருத்தங்கம்

தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்தநாளில் அடக்குமுறைக்கு எதிரான கருத்தரங்கம் 22.09.2018 அன்று மாலை 6 மணிக்கு தாய் ரமாபாய் பவன், பெரம்பூரில் தட்சணாமூர்த்தி முன்னிலையில், நா.பாஸ்கர் வரவேற்புரையாற்ற, இராஜீ தலைமையில் நடைபெற்றது. தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி நிகழ்வை ஒருங் கிணைத்தார். இந்த கருத்தரங்கத்தில் “பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்” என்ற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆய்வுரையாற்றினார். “பா.ஜ.க ஆட்சியில் சந்திக்கும் அடக்குமுறைகள்” என்ற தலைப்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் சிறப்புரையாற்றினார். இறுதியாக வட சென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

**கழகச் செயலவைக் கூட்டம்**

**திருப்பூரில் 7.10.2018 ஞாயிறன்று கூடுகிறது. வாரீர்!**

**– தலைமைக் கழகம்**

### மயிலை கழகம் நடத்திய கால்பந்து போட்டி



சென்னை மாவட்ட மயிலாப்பூர் பகுதி நடத்தும் சுயமரியாதை கால்பந்து கழகத்தின் 6ஆம் ஆண்டு கால்பந்து போட்டி 23.09.2018 அன்று காலை 8.00மணிக்கு குருபுரம் விளையாட்டு திடலில் தொடங்கப்பட்டது. போட்டியை காங்கிரசை சார்ந்த IOC பாலு தொடங்கி வைத்து சுயமரியாதை கால்பந்து கழகத்திற்கும், கழகத் தோழர்களுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து கால்பந்து போட்டியை தொடங்கி வைத்தார்.

மாலை 6.00 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வருகை தந்து சுயமரியாதை கால்பந்து கழகத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்து, இறுதி சுற்றுக்கு தகுதியான அணிகளுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து இறுதிச் சுற்றை தொடங்கி வைத்தார்.

## கொளத்தூரில் பறை பயிற்சிப் பட்டறை

15.09.2018 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்ற தமிழர் கல்வி உரிமை மீட்புப் பயணம் குறித்த தலைமைக் குழு - பயண ஒருங்கிணைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டத்தில் - இயக்கக் கொள்கைப் பரப்புரைக்கும், மக்களிடையே கருத்துகளை எளிமையாகக் கொண்டு சேர்ப்பதற்கும் கலைக்குழுக்களின் தேவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

அதனை செயல்படுத்தும் முதல் முன்னெடுப்பாக தமிழ்நாடு மாணவர் கழகமும், மாற்றம் பகுத்தறிவு கலைக் குழுவும் இணைந்து சேலம் மாவட்டம் கொளத்தூர், உக்கம்பருத்திக்காடு பெரியார் படிப்பகத்தில் இரண்டு நாள் பறை பயிற்சிப் பட்டறையை எதிர்வரும் 3.11.2018, 4.11.2018 (சனி, ஞாயிறு) ஆகிய இரண்டு நாள்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கு மட்டும் நுழைவுக் கட்டணமாக ரூ.500 (பயிற்சி, உணவு செலவுகள் உட்பட) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கான பயிற்சிக் கட்டணம் ரூ.1200 ஆகும்.

பயிற்சி பெற விரும்பும் கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட கைபேசி எண்களுக்குத் தொடர்புகொண்டு 20.10.2018க்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறும், பயிற்சிக்கு வரும்போது கழகப் பொறுப்பாளர்களிடம் கட்டாயம் அனுமதிக் கடிதம் பெற்று வருமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

முன்பதிவு தொடர்புக்கு: 90431 1515 2, 999 44 77 623, 812 48 48 288

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th September 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN